## சீர்காழி நகராட்சி



**2024–ம் ஆண்டு ஜுலை மாதம் 24–ஆம் தேதி நாள்: 24.07.2024 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நகர்மன்ற கூடத்தில் சாதாரணக் கூட்டம் நடவடிக்கை.**

திருமதி.**R.**துர்காபரமேஸ்வரி.**MBA.,**
நகர்மன்ற தலைவர்,
சீர்காழி நகராட்சி.

பொருள் எண்-1

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கட்டிடத்தை நேரில் திறந்து வைத்திட வருகை புரிவதை முன்னிட்டு முதல்வர் அவர்களால் சீர்காழி நகராட்சிக்கு அறிவிக்கப்பட்ட திட்ட பணிகளின் விவரத்தை தமிழ் செய்திதாள்களில் மாவட்ட ஆட்சித்தலைவரின் அறிவுரையின் படி விளம்பரம் செய்யப்பட்டதற்கான பட்டியல் கீழ்கண்ட செய்தி நாளிதழ் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | செய்திதாள் பெயர் | விளம்பரம் செய்யப்பட்ட நாள் | ரசீது எண் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | தினமலர் | 04.03.2024 | 000610 | **64,967.00** |
| 2 | தினமணி | 04.03.2024 | TNI1353228 | **51,975.00** |
| 3 | தினகரன் | 04.03.2024 | 3300475354 | **64,968.76** |
| 4 | தினத்தந்தி | 04.03.2024 | 2324TNJ271 027625 | **47643.76** |
| 5 | மாலை முரசு | 04.03.2024 | TM/23-24/AD03039 | **26,250.00** |
| மொத்தம் | | | | **2,55,804.52** |

மேற்படி, பட்டியல் தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 676/2022 / இ1.

தீர்மான எண்:1109
நாள்: 24.07.2024
அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

பொருள் எண்-2

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களது கடித ந.க.எண் **11919/2022/EA–2** நாள்: **29.01.2024** ஆம் தேதிய வழிகாட்டு நெறிமுறைகள் கடிதத்தின் படி **15**ஆவது நிதிக்குழு மானியம் **2023-24** மற்றும் **2024–25** ன் நிதியாண்டின் Untied Grant கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் சீர்காழி நகராட்சியில் கீழ்காணும் தார் சாலை பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி இப்பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்க வேண்டி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களுக்கு பிரேரணை சமர்பிக்க நகர்மன்றதலைவர் அவர்களின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

**15வது மத்திய நிதி குழு (15-CFC- UNTIED GRANT)**
**திட்டம்- 2023-24**

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| | **2023–2024 சிப்பம் 1** | **74.00** |
| 1 | புளிச்சக்காடு சுடுகாடு சாலை | |
| 2 | பள்ளிவாசல் தெரு | |
| 3 | என்.ஜி.ஓ நகர் | |
| 4 | சட்டநாதர் காலனி இரண்டாம் தெரு | |
| 5 | வ.உ.சி தெற்கு தெரு | |
| 6 | வ.உ.சி வடக்கு தெரு | |
| 7 | இராஜாஜி தெரு | |
| | **2023–2024 சிப்பம் 2** | |
| 1 | திருவள்ளுவர் நகர் முதல் வி.என்எஸ் நகர் வரை | **81.00** |
| 2 | திருவள்ளுவர் நகர் முதல் குறுக்கு தெரு | |
| 3 | திருவள்ளுவர் நகர் இரண்டாம் குறுக்கு தெரு | |
| 4 | சம்மந்தர் காலனி | |
| 5 | முதலியார் குளம் தேர் வடக்கு வீதி | |
| 6 | ஆர்.கே.டி நகர் | |
| 7 | சுபஸ்ரீ நகர் | |
| 8 | தியாகராஜ நகர் | |
| | **மொத்தம்** | **155.00** |

<u>அலுவலகக்குறிப்பு</u>: மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 243/2024/இ1

தீர்மான எண்:1110
நாள்: 24.07.2024
அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

பொருள் எண்-3

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்: 1250/2022/SBM (U) 2.0 நாள்: **01.03.2024** ஆம் தேதிய வழிகாட்டு நெறிமுறைகள் கடிதத்தின் படி SBM 2.0 **2024–25** ன் நிதியாண்டின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் சீர்காழி நகராட்சியில் கீழ்காணும் சமுதாயக்கழிப்பிடம் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி இப்பணிக்கு நிர்வாக அனுமதி வழங்க வேண்டி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களுக்கு பிரேரணை சமர்பிக்க நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

**SBM 2.0 (2024–25)**

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|

தீர்மான எண்:1111
நாள்: 24.07.2024
அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| 1 | சீர்காழி நகராட்சி வார்டு எண்:3 பெத்தடி தெருவில் சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி | **ரூ.19.30** |

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 612/2024/இ1

---

பொருள் எண்-4

சீர்காழி நகராட்சி குடிநீர் திட்ட நிதி – **2023–2024** ன் கீழ் சித்தமல்லி தலைமை நீரேற்றம் நிலையத்தில் இயங்கி வந்த மின் மோட்டார், மின் ஸ்டாட்டர்கள் மற்றும் மின் மோட்டார் ஒயர்கள் பழுது ஏற்பட்டதை தொடர்ந்து நகராட்சிகளின் சட்டம் **1920** பிரிவு **2022 57(7)**ன் கீழ் ஒப்பந்ததாரர் திருமதி.T.ஜீவா அவர்களின் குறைவான விலைப்புள்ளியினை ஏற்று நகர்மன்ற தலைவரின் அனுமதி பெற்று பழுது நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு மீண்டும் மின் மோட்டர் இயக்கப்பட்டதற்கான பட்டியல் தொகை **ரூ.3,16,873/–** ஐ வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** : நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று செலவீனம் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்: 558/2023/இ1

தீர்மான எண்:**1112**
நாள்: **24.07.2024**
அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

---

பொருள் எண்-5

சீர்காழி நகராட்சி கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் 7 துவக்கப்பள்ளி 1 உயர்நிலைப்பள்ளி 2 நடுநிலைப்பள்ளி பயிலும் மாணவ மாணவியர்க்கு ஆண்டு பொது தேர்வுகளுக்கு தயாராவது, போட்டித்தேர்வுக்கு தயார் செய்வது, மாதிரி வினா விடைகள் வழங்குவது, மாணவர்களின் வாசிப்பு திறனை மேம்படுத்தும் விதமாக ஆகியவற்றில் பயனுறும் வகையில் மாணவர்களின் நலன் கருதி தினசரி தமிழ் நாளிதழ் **ரூ.4.00/–** என்ற வீதத்தில் கீழ்காணும் விபரங்களின் படி **01.11.2023** முதல் **31.03.2024** வரை (சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரசு பொது விடுமுறைகள் நீங்கலாக) தினகரன் நாளிதழ் விநியோகம் செய்யப்பட்டதற்கான பட்டியல் **05.04.2022** ன் படி தொகை **ரூ.4268/–** ஐ நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பள்ளியின் பெயர் | ஒரு நாளைக்கு வழங்கப் பட்ட பிரதிகளின் எண்ணிக்கை | மொத்தம் வழங்கப்பட வேண்டிய பிரதிகளின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | நவம்பர் 2023 | டிசம்பர் 2023 | ஜனவரி 2024 | பிப்ரவரி 2024 | மார்ச் 2024 |
| 1 | நகராட்சி தாடளன் மேற்கு தொடக்கப்பள்ளி | 1 | 21 | 16 | 17 | 22 | 21 |
| 2 | நகராட்சி தொடக்கப்பள்ளி துறையூர் | 1 | 21 | 16 | 17 | 22 | 21 |
| 3 | நகராட்சி தொடக்கப்பள்ளி கோவில்பத்து | 1 | 21 | 16 | 17 | 22 | 21 |
| 4 | நகராட்சி தொடக்கப்பள்ளி புளிச்சக்காடு | 1 | 21 | 16 | 17 | 22 | 21 |

தீர்மான எண்:**1113**
நாள்: **24.07.2024**
அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | நகராட்சி தாடளன் முஸ்லீம் துவக்கப்பள்ளி | 1 | 21 | 16 | 17 | 22 | 21 |
| 6 | நகராட்சி தொடக்கப்பள்ளி கீழத்தென்பாதி | 1 | 21 | 16 | 17 | 22 | 21 |
| 7 | நகராட்சி தொடக்கப்பள்ளி பனமங்கலம் | 1 | 21 | 16 | 17 | 22 | 21 |
| 8 | நகராட்சி நடுநிலைப்பள்ளி பனங்காட்டான்குடி சாலை | 1 | 21 | 16 | 17 | 22 | 21 |
| 9 | நகராட்சி நடுநிலைப்பள்ளி ஊழியன்காரன் தோப்பு | 1 | 21 | 16 | 17 | 22 | 21 |
| 10 | நகராட்சி உயர்நிலைப்பள்ளி வடக்குமடவிளாகம் | 2 | 42 | 32 | 34 | 44 | 42 |

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண் : 1199/2023/இ1.

பொருள் எண்-6

சீர்காழி நகராட்சி கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் 7 துவக்கப்பள்ளி 1 உயர்நிலைப்பள்ளி மற்றும் 2 நடுநிலைப்பள்ளி பயிலும் மாணவ மாணவியர்க்கு ஆண்டு பொதுதேர்வு தேர்வுகளுக்கு தயாராவது, போட்டித்தேர்வுக்கு தயார் செய்வது, மாதிரி வினா விடைகள் வழங்குவது, மாணவர்களின் வாசிப்பு திறனை மேம்படுத்தும் விதமாக மாணவர்களின் நலன் கருதி தினசரி தமிழ் நாளிதழ் **ரூ4.00/–** என்ற வீதத்தில் கீழ்காணும் விபரங்களின் படி **01.07.2024** முதல் **31.12.2024** வரை தினசரி (சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரசு பொது விடுமுறைகள் நீங்கலாக) கீழ் கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில், வினியோகம் செய்ய தினகரன், நாளிதழ் அலுவலகம், ராம்ஜி நகர், திருச்சிராப்பள்ளி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பள்ளியின் பெயர் | ஒரு நாளைக்கு வழங்கப்பட வேண்டிய பிரதிகளின் எண்ணிக்கை | மொத்தம் வழங்கப்பட வேண்டிய பிரதிகளின் எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஜீலை 2024 | ஆகஸ்ட் 2024 | செப்டம்பர் 2024 | அக்டோபர் 2024 | நவம்பர் 2024 | டிசம்பர் 2024 |
| 1 | நகராட்சி தாடளன் மேற்கு | 1 | 22 | 20 | 20 | 20 | 21 | 21 |

தீர்மான எண்:1114
நாள்: 24.07.2024
அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தொடக்கப்பள்ளி | | | | | | | |
| 2 | நகராட்சி தொடக்கப்பள்ளி துறையூர் | 1 | 22 | 20 | 20 | 20 | 21 | 21 |
| 3 | நகராட்சி தொடக்கப்பள்ளி கோவில்பத்து | 1 | 22 | 20 | 20 | 20 | 21 | 21 |
| 4 | நகராட்சி தொடக்கப்பள்ளி புளிச்சகாடு | 1 | 22 | 20 | 20 | 20 | 21 | 21 |
| 5 | நகராட்சி தாடளன் முஸ்லீம் துவக்கப்பள்ளி | 1 | 22 | 20 | 20 | 20 | 21 | 21 |
| 6 | நகராட்சி தொடக்கப்பள்ளி கீழத்தென்பாதி | 1 | 22 | 20 | 20 | 20 | 21 | 21 |
| 7 | நகராட்சி தொடக்கப்பள்ளி பனமங்கலம் | 1 | 22 | 20 | 20 | 20 | 21 | 21 |
| 8 | நகராட்சி நடுநிலைப்பள்ளி பனங்காட்டான் குடி சாலை | 1 | 22 | 20 | 20 | 20 | 21 | 21 |
| 9 | நகராட்சி நடுநிலைப்பள்ளி ஊழியான்காரன் தோப்பு | 1 | 22 | 20 | 20 | 20 | 21 | 21 |
| 10 | நகராட்சி உயர்நிலைப்பள்ளி வடக்குமடவிளாகம் | 2 | 44 | 40 | 40 | 40 | 42 | 42 |

<u>**அலுவலக குறிப்பு:**</u> மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண் : **1199/2023/இ1.**

| | | |
|---|---|---|
| பொருள் எண்-7 | சீர்காழி சீர்காழி நகராட்சியில் **பொது நிதி 2023-2024** இன் கீழ் **ரூ.3.40** இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி கட்டண கழிப்பறையின் மதில்சுவர்,செப்டிக் டேங்க் மூடு உரை மற்றும் செப்டிக் டேங்கிற்கு செல்லும் பைப்லைன் சீரமைக்கும் பணிக்கு **12.03.2024** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | தீர்மான எண்:1115<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த மதிப்பீட்டைவிட |
|---|---|---|
| 1 | ஸ்ரீ கான்ராக்டர்ஸ், பிடாரி கீழ வீதி, சீர்காழி–609110 | (-) 0.20% குறைவு |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>2</td><td>திருமதி.டி.ஜீவா,6/19, திருமஞ்சன வீதி,<br>சீர்காழி–609110</td><td>(+)0.42% அதிகம்</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்–1ல் உள்ள ஸ்ரீ கான்ராக்டர்ஸ், அவர்களின் (-)0.20% குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u> : 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br>
ந.க. எண்: 205/2024/இ1/5
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-8</td>
<td>
சீர்காழி நகராட்சியில் பொது நிதி 2023-2024 இன் கீழ் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் வடக்கிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கையாக சேதமடைந்த சாலைகளை (WMM) சீரமைக்கும் பணிக்கு 12.03.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரா் பெயர்</th><th>ஒப்பந்த மதிப்பீட்டைவிட</th></tr>
<tr><td>1</td><td>திருமதி.சிவகாமசுந்தரி,<br>2/245, புதுப்பட்டிணம்,<br>சீர்காழி(வ).</td><td>(-) 0.02% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திருமதி.டி.ஜீவா,<br>6/19, திருமஞ்சன வீதி,<br>சீர்காழி–609110</td><td>(+)0.02% அதிகம்</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்–1 ல் உள்ள திருமதி.சிவகாமசுந்தரி, அவர்களின் (-)0.02% குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u> : 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br>
ந.க. எண்: 205/2024/இ1/6
</td>
<td>தீர்மான எண்:1116<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-9</td>
<td>
சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு இந்நகராட்சி மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எதிர்வரும் பருவ மழை காலங்களில் டெங்கு மற்றும் மலேரியா போன்ற நீர்தொற்று நோய்களிடம் இருந்து பொதுமக்களை காக்கும் பொருட்டு குடிநீரினை சுத்திகரித்து குளோரினேஷன் செய்து வழங்கிட தற்சமயம் குறைவான அளவு பிளிச்சிங் பவுடர் இருப்பில் உள்ளதால் நகராட்சி ஆணையர், பொறியாளர் மற்றும் நகர்மன்ற தலைவர் ஆகியோரின் அறிவுரையின் படி 2024–2025 ஆம் ஆண்டிற்கு 5000 கிலோ பிளிச்சிங் பவுடர் (குளோரின் பவுடர்) கொள்முதல் செய்திட ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.2.45 இலட்சத்தை நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u>: மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்: /2024/இ1.
</td>
<td>தீர்மான எண்:1117<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| பொருள் எண்-10 | சீர்காழி நகராட்சி 15வது நிதிகுழு மான்யம் (Untied Grant) 2022–2023ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் விடுபட்ட மற்றும் புதிய இடங்களில் LED தெரு விளக்குகள் அமைக்கும் பணி முடிவுற்றதை தொடர்ந்து புதியதாக அமைக்கப்பட்ட LED விளக்குகளுக்கு 9 இடங்களில் சுவிட்சு பாக்ஸ் (switch box) அமைத்திட நகராட்சி மின் கம்பியாளரின் குறிப்பின் படியும், நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோரின் அறிவுரையின் படி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொது மக்களின் நலன் கருதியும், பணியின் அவசர அவசியம் கருதியும் உள்ளூர் விலைப்புள்ளி கோரி பணிமேற்கொண்டதையும், அதற்கான தொகை **ரூ.35000/–** ஐ நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.<br>3. மேற்படி தொகை ரூ.35000/– ஐ வழங்கிட அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: /2024/இ1. | தீர்மான எண்:1118<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-11 | சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்-04 தோட்டமானியம், நித்தியவனம் மற்றும் வார்டு எண்-12 நகராட்சிக்கு சொந்தமான மீன் மார்க்கெட் ஆகிய இடங்களில் புதிய 3 எண்ணிக்கை குடிநீர் கை பம்புகள் அமைத்திட கோரி அப்பகுதி பொதுமக்கள், வியாபாரிகள் மற்றும் வார்டு எண்:04,12 ஆகிய நகர்மன்ற உறுப்பினர்களின் கோரிக்கையின் படியும், நகராட்சி ஆணையர், பொறியாளர் மற்றும் நகர்மன்ற தலைவர் ஆகியோரின் அறிவுரையின் படியும் மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை **ரூ.0.45** இலட்சத்தை நகராட்சி பொது நிதி அல்லது குடிநீர் திட்ட நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: /2024/இ1. | தீர்மான எண்:1119<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-12 | சீர்காழி நகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் உள்ள நகராட்சி கட்டண கழிப்பறை கட்டிடம் கட்டப்பட்டு சுமார் 15 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. தற்போது கழிவறை கட்டிடத்தில் உள்ள கதவுகள், கழிவு நீர் மற்றும் தண்ணீர் குழாய்கள், கட்டிட மேல் தள ரூப்புகள், தரைகள் ஆகியவை சேதமடைந்துள்ளதால் அவற்றை சரி செய்ய நகராட்சி ஆணையர், பொறியாளர் மற்றும் நகர்மன்றதலைவர் ஆகியோரின் அறிவுரையின் படிதயாரிக்கப்பட்ட மதிப்பீடு **ரூ.11.00 இலட்சத்தை** நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: /2024/இ1. | தீர்மான எண்:1120<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-13 | சீர்காழி நகராட்சி வார்டு எண்:08 தாடாளன் மேற்கு வீதியில் அமைந்துள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் தேசிய நகர்புற சுகாதார பணி (NUHM) 2021-22 திட்டத்தின் கீழ் ஆரம்ப சுகாதார நிலையம் (UPHC) கட்டும் பணி **ரூ.75.00** இலட்சத்திற்கு நடைபெற்று வருகிறது. மேற்படி பணிக்கான மதிப்பீட்டில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கழிவு நீர் தொட்டி, பேவர் பிளாக் தளம் மற்றும் மழை நீர் வடிகால் மூடி அமைக்க இந்நகர்மன்ற தீர்மான எண்-1034, நாள்-31.10.2023ல் **ரூ.10.00இலட்சத்திற்கு** அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை நகராட்சி நிர்வாக இயக்குநர், மாவட்ட ஆட்சியர் மற்றும் மதிப்பீட்டு குழு ஆகியோரால் நேரடி ஆய்வு செய்யப்பட்டு அறிவுறுத்தியதன் படி இப்பணியினை மேற்கொள்ள | தீர்மான எண்:1121<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அனுமதிக்கப்பட்ட மேற்படி தீர்மானத்தை ரத்து செய்து மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் நோயாளிகளின் நலனை கருத்தில் கொண்டு கூடுதல் பணியாக கழிவு நீர் தொட்டி, பேவர் பிளாக் தளம், பெயின்டிங், அலுமினிய கதவு, ஜன்னல், கழிப்பறை கதவு, ரூப் டைல்ஸ், கேட், மழை நீர் வடிகால் மூடி மற்றும் இதர பணிகள் அமைப்பது அவசியமாகிறது எனவே தயாரிக்கப்பட்ட மதிப்பீடு **ரூ.20.00 இலட்சத்திற்கு** நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 09/2022/இ1/1 | |
| பொருள் எண்-14 | சீர்காழி நகராட்சிக்கு சொந்தமான அலுவலக கட்டிடம், பம்பு ரூம், சித்தமல்லி தலைமை நீரேற்று நிலையம் மற்றும் MCC மையங்கள் ஆகியற்றில் மின் உபகரணங்களில் ஏற்படும் சிறு சிறு பழுதுகளை சரி செய்து புதிய மின் உபகரணங்கள் மாற்றிட ஆகும் உத்தேச செலவினம் **ரூ.25,000/-**ஐ நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியினை உள்ளூர் நிறுவனங்களில் கொள்முதல் செய்து பணி மேற்கொள்ளவும் அதற்கான தொகை வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: /2023/இ1. | தீர்மான எண்:1122<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-15 | சீர்காழி நகராட்சி குடிநீர் பணிக்கு பயன்படுத்தப்படும் பொது குழாய்கள், கைபம்புகள் மற்றும் இதர வால்வுகளில் ஏற்படும் சிறு சிறு பழுதுகளை சரி செய்து புதிய உபகரணங்கள் மாற்றிட ஆகும் உத்தேச செலவினம் **ரூ.25,000/-**ஐ நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியினை உள்ளூர் நிறுவனங்களில் கொள்முதல் செய்து பணி மேற்கொள்ளவும் அதற்கான தொகை வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 409/2023/இ1. | தீர்மான எண்:1123<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-16 | சீர்காழி நகராட்சி கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) 2023-24ன் கீழ் வார்டு எண்-18 புதிய பேருந்து நிலையம் மேம்பாடு செய்யும் பணியின் போது பேருந்து நிலையத்தில் உடைக்கப்படும் சாலையின் சிமெண்ட் கான்கிரீட் காரைகளை அப்புறப்படுத்தி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுகளின் தெருக்களில் உள்ள சேதமடைந்த சாலைகளில் கொட்டி பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் சமன்படுத்தி தருமாறு நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களின் விண்ணப்பங்களின்படியும், நகராட்சி ஆணையர், பொறியாளர் மற்றும் நகர்மன்ற தலைவர் ஆகியோரின் அறிவுரையின் படி உடைக்கப்பட்ட சிமெண்ட் கான்கிரீட் காரைகளை நகராட்சி சாலைகளில் கொட்டி சமன்படுத்தும் பணி மேற்கொள்ள முதற்கட்டமாக ஆகும் உத்தேச செலவினம் **ரூ.2.00 இலட்சத்தை** நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 409/2023/இ1. | தீர்மான எண்:1124<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| பொருள் எண்-17 | சீர்காழி நகராட்சி பொது நிதி-2023-24 அருள்மிகு ஸ்ரீ சட்டநாதசுவாமி தேவஸ்தானம், சீர்காழி பிரமோற்சவம் விழாவிற்கான கீழவாசல் சன்னதி கோபுர வாசலில் அமைக்கப்படும் நடவன பந்தலுக்கான உபயத்தினை சீர்காழி நகராட்சியின் சார்பாக தொன்று தொட்டு செய்யப்பட்டு வருகிறது கடந்த 5 வருடங்களாக கோவிட்-19 மற்றும் திருக்கோவிலின் கும்பாபிஷேக பணிகள் நடைபெற்று வந்ததால் மேற்படி உற்சவம் கோவில் வளாகத்திற்கு உள்ளே நடைபெற்று வந்தது. 2024ஆம் ஆண்டிற்கான பிரமோற்சவம் விழா 13.04.2024 தொடங்கி 03.05.2024ல் நிறைவடைவதால் கண்காணிப்பாளர், ஸ்ரீ சட்டநாதசுவாமி தேவஸ்தானம், சீர்காழி அவர்களின் கடிதத்தின் படி பிரமோற்சவம் விழாவிற்கான கீழவாசல் சன்னதி கோபுர வாசலில் அமைத்துதர கோரப்பட்டது. மேற்படி காலம் பாராளுமன்றத் தேர்தல் 2024ன் தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருந்ததால் நகராட்சி ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று திருகோவில் பணி என்பதால் விலைப்புள்ளி கோரி அருள்மிகு ஸ்ரீ சட்டநாதசுவாமி கீழ சன்னதி கோபுர வாசலில் நடவன பந்தல், தற்காலிக குடிநீர் தொட்டிகள் மற்றும் மின் விளக்குகள் அமைக்கும் பணி ரூ.75,000/-க்கு மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>__அலுவலகக்குறிப்பு:__<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியினை மன்றம் ஏற்கலாம்.<br>3. மேற்படி தொகை **ரூ.75,000/-**ஐ வழங்கிட அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: /2024/இ1. | தீர்மான எண்:1125<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-18 | சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள வார்டு எண்–07 மற்றும் வார்டு எண்–20 ஆகிய இரண்டு வார்டுகளில் நகர்மன்ற உறுப்பினர்கள் கோரிக்கையின் படி அப்பகுதி பொதுமக்களின் தண்ணீர் தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு நகராட்சி ஆணையர், பொறியாளர் மற்றும் நகர்மன்ற தலைவர் ஆகியோரின் அறிவுரையின்படி புதியதாக இரண்டு சிறுவிசைப்பம்புகள் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு **ரூ.1.80 இலட்சத்தை** நகராட்சி பொது நிதி அல்லது குடிநீர் திட்ட நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>__அலுவலக குறிப்பு:__ மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:1541/2024/இ1. | தீர்மான எண்:1126<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-19 | சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்–04 புளிச்சக்காடு மற்றும் வார்டு எண்–22 இமயவர்மன் கார்டன் ஆகிய இடங்களில் உள்ள குடியிருப்புகளில் வரிவிதிப்பாளர்களின் கோரிக்கையின் படி நகராட்சி குடிநீர் இணைப்பு வழங்கிட பகிர்மான குழாய் அமைக்க நகராட்சி ஆணையர், பொறியாளர் மற்றும் நகர்மன்ற தலைவர் ஆகியோரின் அறிவுரையின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு **ரூ.5.00 இலட்சத்தை** நகராட்சி பொது நிதி அல்லது குடிநீர் திட்ட நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>__அலுவலக குறிப்பு:__ மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:1538/2024/இ1. | தீர்மான எண்:1127<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-20 | சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்–08 ரயிலடி தோப்பு தெருவில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான பொது கழிப்பிடம் அப்பகுதி மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி கழிப்பிடத்தில் சேதமைந்த டைல்ஸ், இருக்கைகள், கதவு மற்றும் இதர குறைப்பாடுகளை சீரமைத்து தர நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கையின் படி அப்பகுதி பொது மக்களின் நலன் கருதி நகராட்சி ஆணையர், பொறியாளர் மற்றும் நகர்மன்ற தலைவர் ஆகியோரின் அறிவுரையின்படி சீரமைப்பு | தீர்மான எண்:1128<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு **ரூ.2.50 இலட்சத்தை** நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>__அலுவலக குறிப்பு:__ மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:1542/2024/இ1. | |
| பொருள் எண்-21 | சீர்காழி நகராட்சிக்கு சொந்தமான பனங்காட்டாங்குடி ரோடு நகராட்சி நடுநிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியர் அவர்களின் கோரிக்கையின் படியும் மாணவ, மாணவியரின் நலன் கருதியும் பள்ளியின் பழைய கட்டிடம் மற்றும் சுற்று சுவர் ஆகியவற்றை பராமரிப்பு செய்யும் பணிக்கு நகராட்சி ஆணையர், பொறியாளர் மற்றும் நகர்மன்ற தலைவர் ஆகியோரின் அறிவுரையின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு **ரூ.1.45 இலட்சத்திற்கு** நகராட்சி கல்வி நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>__அலுவலக குறிப்பு:__ மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:729/2023/இ1/5. | தீர்மான எண்:1129<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-22 | சீர்காழி நகராட்சிக்கு சொந்தமான பனமங்கலம் தெரு நகராட்சி தொடக்கப்பள்ளியின் தலைமை ஆசிரியர் அவர்களின் கோரிக்கையின் படியும் மாணவ, மாணவியரின் நலன் கருதியும் பள்ளியின் பழைய கட்டிடம் மற்றும் சுற்று சுவர் ஆகியவற்றை பராமரிப்பு செய்யும் பணிக்கு நகராட்சி ஆணையர், பொறியாளர் மற்றும் நகர்மன்ற தலைவர் ஆகியோரின் அறிவுரையின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு **ரூ.1.75 இலட்சத்திற்கு** நகராட்சி கல்வி நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>__அலுவலகக்குறிப்பு:__ மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:729/2023/இ1/8. | தீர்மான எண்:1130<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-23 | சீர்காழி நகராட்சிக்கு சொந்தமான புளிச்சக்காடு நகராட்சி தொடக்கப்பள்ளியின் தலைமை ஆசிரியர் அவர்களின் கோரிக்கையின் படியும் மாணவ, மாணவியரின் நலன் கருதியும் பள்ளியின் சத்துணவு கூடம் மற்றும் கழிவறை ஆகியவற்றை பராமரிப்பு செய்யும் பணிக்கு நகராட்சி ஆணையர், பொறியாளர் மற்றும் நகர்மன்ற தலைவர் ஆகியோரின் அறிவுரையின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு **ரூ.1.70 இலட்சத்திற்கு** நகராட்சி கல்வி நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>__அலுவலகக்குறிப்பு:__ மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 729/2023/இ1/6. | தீர்மான எண்:1131<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்-24 | சீர்காழி நகராட்சிக்கு சொந்தமான ஊழியக்காரன் தோப்பு தெரு நகராட்சி நடுநிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியர் அவர்களின் கோரிக்கையின்படியும் மாணவ, மாணவியரின் நலன் கருதியும் கழிவறை பராமரிப்பு செய்யும் பணிக்கு நகராட்சி ஆணையர், பொறியாளர் மற்றும் நகர்மன்ற தலைவர் ஆகியோரின் அறிவுரையின்படி **ரூ.0.70 இலட்சத்திற்கு** நகராட்சி கல்வி நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>__அலுவலகக்குறிப்பு:__ மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:729/2023/இ1/9. | தீர்மான எண்:1132<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்-25 | சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 2024–25 ஆம் ஆண்டிற்கான தெருக்களில் உள்ள குடிநீர் வினியோக பகிர்மானக்குழாய்களில் அடிக்கடி உடைப்பு ஏற்படுவதை சரி செய்திடவும், நகராட்சிக்கு சொந்தமான குடிநீர்குழாய்களை பழுதுநீக்கம் செய்திடவும், பொதுமக்களின் நலன் கருதியும் குடிநீர் வீணாகாமல் தடுத்திடவும்,மற்றும் மழைக்காலங்களில் தொற்று நோய்கள் வராமல் தடுத்திடவும் **ரூ.5,00,000/– இலட்சம்** மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் இச்செலவீனத்தினை குடிநீர் திட்ட நிதி அல்லது பொது நிதியிலிருந்து வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>__அலுவலகக்குறிப்பு :__ மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:1133<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | ந.க.எண்: 1177/2023/இ1. | |
| பொருள் எண்-26 | சீர்காழி நகராட்சி எதிர் வரும் வடகிழக்கு பருவமழை 2024 க்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்காக மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்யும் பணி, ஆங்காங்கே தேங்கும் மழை நீரை அகற்றிட JCB இயந்திரங்களை வாடகைக்கு அமர்த்தியும், கனமழை காலங்களில் ஒப்பந்த பணியாளர்களைக் கொண்டு மீட்பு பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் இதர முன்னெச்சரிக்கை பணிகளுக்கு நகராட்சி ஆணையர், பொறியாளர் மற்றும் நகர்மன்ற தலைவர் ஆகியோரின் அறிவுரையின் படி உத்தேச செலவினத் தொகை **ரூ.5.00 இலட்சத்தை** நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 1540/2024/இ1. | தீர்மான எண்:1134<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்-27 | சீர்காழி நகராட்சி எதிர் வரும் வடகிழக்கு பருவமழை 2024 க்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்காக ஆங்காங்கே தேங்கும் மழை நீரை அகற்றிட நகராட்சியால் தற்போது வரை ஆயில் இன்ஜீன்கள் வாடகை அடிப்படையில் பெறப்பட்டு நீரை வெளியேற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. எனவே நகராட்சி ஆணையர், பொறியாளர் மற்றும் நகர்மன்ற தலைவர் ஆகியோரின் அறிவுரையின்படி நகராட்சிக்கு சொந்தமாக புதிய 3 எண்ணிக்கை ஆயில் இன்ஜீன்கள் மற்றும் உதிரிபாகங்களை கொள்முதல் செய்திட ஆகும் உத்தேச செலவினத் தொகை **ரூ.1.50 இலட்சத்தை** நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 1540/2024/இ1/1. | தீர்மான எண்:1135<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்-28 | சீர்காழி நகராட்சியில் நுண்ணுயிர் உரக்கிடங்கில் சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் கழிவு பொருட்களை அரியலுார் லாரி மூலம் எடுத்து செல்வதற்கு ஒரு நடைக்கு குறைந்தபட்சம் **ரூ.15,000** செலவிட வேண்டியுள்ளது. மேற்படி உரக்கிடங்கில் பிளாஸ்டிக் கழிவுகள் அதிக அளவில் தேங்கியுள்ளதால் அதை அப்புறப்படுத்த வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். எனவே **2.25 லட்சத்திற்கு** பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 1904/2024/எச்1 | தீர்மான எண்:1136<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்-29 | பொதுசுகாதாரப்பிரிவில் 2024-2025ஆம் ஆண்டில் கீழ்கண்டுள்ள இனங்களுக்கு ஆகும் உத்தேச செலவீனத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு சமர்பிக்கப்படுகிறது. | தீர்மான எண்:1137<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| வ. எண் | செலவீனம் விபரம் | உத்தேச செலவீனத் தொகை இலட்சத்தில் |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1 | திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்படும் அனைத்து வாகனங்களுக்கும் அரசின் உத்திரவின் படி செலுத்தப்பட வேண்டிய சாலைவரி, இன்சூரன்ஸ் பசுமைவரி, தகுதி சான்று கட்டணம் உள்ளிட்ட அனைத்து வரிகளும் செலுத்துவதற்கு. | **3.50** |
| 2 | விற்பனை செய்ய இயலாத பிளாஸ்டிக் கழிவுகளை பேலிங் செய்வதற்கு தேவையான (ROPE) ரோப் மற்றும் கிளிப்புகள் தேவைப்படுவதால் ஓராண்டிற்கு தேவையானவற்றை அவ்வப்போது வாங்கி பயன்படுத்திக் கொள்வதற்கு. | **0.50** |
| 3 | பொதுசுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் சம்மந்தமாக பொதுமக்களுக்கும், வணிக நிறுவனங்களுக்கும் தேவையான விழிப்புணர்வை ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளதால் ஆட்டோவில் மைக் விளம்பரம் செய்தல் மற்றும் தேவைக்கேற்ப விழிப்புணர்வு விளம்பரப் பதாகைகள் மற்றும் பிட் நோட்டீஸ் அடிக்க வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட விழிப்புணர்வு பணிகளை மேற்கொள்வதற்கு. | **1.00** |
| 4 | நுண்ணுயிர் உரம் மையத்தில் (MCC) மட்கும் குப்பைகளை கொண்டு இயற்கையாக உரம் தயாரிக்க தேவையான மூலப்பொருளான EM Solution மற்றும் உம்மி, தவிடு, வெல்லம் கொள்முதல் செய்வதற்கு. | 1.00 |
| 5 | பிளிச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்பு, பினாயில், டாய்லெட் கிளீனர் உள்ளிட்டவைகளை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் நேரடியாக பெற்றுக்கொள்ளுதல். | 6.50 |
| 6 | துாய்மை பணியாளர்களுக்கு ஒளிருட்டும் ஜாக்கெட்டுகள் (Reflected Jacket) கையுரை மற்றும் shoes வாங்கி வழங்குதல். | 0.50 |

எனவே மேற்காணும் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவீனம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்: **4064/2021/எச்1**

**பொருள் எண்-30**

சீர்காழி நகராட்சி கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பத்து நகராட்சி பள்ளிகளில் 507 எண்ணிக்கையிலான மாணவர்கள் பயின்று வருகின்றனர். பள்ளிகளில் தினசரி சேகரமாகும் கழிவுநீர் அவ்வபோது நிரம்பி வழியும் நிலையில் உள்ளதால் மாணவர்களுக்கு நோய் தொற்று ஏற்படா வண்ணம் தனியார் வாகனம் மூலம் கழிவுநீரை அகற்றுவதற்கு ரூ.50000/- பொது நிதியிலிருந்து செலவீனம் மேற்கொள்ள மன்றத்தின் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>: மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்: /2024/எச்1.

தீர்மான எண்:1138
நாள்: 24.07.2024
அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்-31**

இந்நகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு குத்தகை இனங்களின் உரிமம் காலம் வருகின்ற **31.03.2024** அன்று முடிவடையும் 5 இனங்களுக்கு ஒப்பந்தபுள்ளி / ஏலம் கடந்த **29.02.2024** மற்றும் **06.03.2024** அன்றும் மறு ஒப்பந்தபுள்ளி / ஏலம் கோரப்பட்டதில் 1) பழையபேருந்து நிலையம் கட்டணக்கழிவறை, 2) புதியபேருந்து நிலையம் கட்டணக்கழிவறை ஆகிய இரண்டு குத்தகை இனங்களுக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதில் இரண்டு ஒப்பந்தபுள்ளிகளும் அரசு நிர்ணயம் செய்யப்பட்ட மதிப்பை விட குறைவாக வரப்பெற்றதனால், மறு ஒப்பந்தபுள்ளி / ஏலம் **14.03.2024** அன்று கோரப்பட்டது.

இதில் மேற்காணும் இரண்டு குத்தகை இனங்களுக்கு மட்டும் மறுஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றதில் புதிய பேருந்து நிலையம் கட்டணக்கழிவறை இனம் அரசு நிர்ணயம் மதிப்பைவிட குறைவாக ஒப்பந்தபுள்ளி கோரியதால் மறு ஒப்பந்தபுள்ளி கோரப்பட உள்ளது. மேலும் பழைய பேருந்து நிலையம் கட்டணக் கழிவறைக்கு கீழ் கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது அதன் விபரம் கீழ்கண்டுள்ளவாறு,

| வ. எண் | இனத்தின் பெயர் | ஒப்பந்தபுள்ளி கோரியவரின் விபரம் | 2021 2022 குத்தகை | 2022 2023 குத்தகை | 2023 2024 குத்தகை | மூன்றாண்டு விகிதம் | 5% உயர்வு செய்து அரசு நிர்ணயம் தொகை | ஒப்பந்தபுள்ளி கோரிய தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பழைய பேருந்து நிலையம் கட்டணக்கழிவறை | திரு.கார்திகேயன் சீர்காழி | 405000/- | 425250/- | 446513/- | 425588/- | 468839/- | 560400/- |
| 2 | | திரு.K.கார்திக் C40/25 திருத்தளமுடையார்கோவில் சீர்காழி | 405000/- | 425250/- | 446513/- | 425588/- | 468839/- | 543210/- |

மேற்கண்ட விபரபடி மூன்றாண்டு விகிதபடியும், அரசு நிர்ணயம் செய்யப்பட்ட தொகையினைவிடவும், 10% சதவீதத்திற்கு வரிசை எண்:1-ல் உள்ள ஒப்பந்தபுள்ளி அதிகமாக கோரியதால் மேற்கண்ட நபர்க்கு குத்தகை இனத்தின் உரிமம் 2024-2027 வரையிலான காலத்திற்கு குத்தகைவிதிகள் மற்றும் நிபந்தனைகள் அடிப்படையில் உரிமம் வழங்கிட மன்றப்பொருள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

தீர்மான எண்:1139
நாள்: 24.07.2024
அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

<table>
<tr>
<td></td>
<td><u>அலுவலகக்குறிப்பு</u>: மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 2851/2023/அ1.</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள்<br>எண்-32</td>
<td>இந்நகராட்சிக்கு சொந்தமான 13 கடைகளுக்கான மறு ஒப்பந்தபுள்ளி / ஏலம் கடந்த 27.02.2024 அன்று கோரியதில் திரு. பஜல்முகமது கடவாசல் என்பவர் இந்நகராட்சிக்கு செலுத்தவேண்டிய பொறுப்புத்தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகை செலுத்தி ஏலத்தில் கலந்துக்கொண்டார். மேற்படி நபர் பழையபேருந்து நிலையத்தில் உள்ள நெ 7 என்ற கடைக்கு ஏலம் கோரியது தொடர்பாக, மேற்படி கடைகளுக்கான ஏலம் இந்நகராட்சியால் கடந்த 13.10.2023, 29.12.2023 ஆகிய இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டும் செய்திநாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டும், ஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கோரி எவரும் வரப்படவில்லை என்பதனால், மூன்றாவது ஒப்பந்தபுள்ளி ஏலம் விடப்பட்டதால் குத்தகை விதிகளின் படியும் மேலும் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படாமல் இருக்க மேற்படி நபர்க்கு கீழ் கண்டுள்ளவாறு ஏலம் விடப்பட்டது.
<table>
<tr><th>வ. எண்</th><th>கடையின் விபரம்</th><th>பழைய வாடகை ரூ</th><th>15% உயர்வு ரூ</th><th>அரசு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை ரூ</th><th>ஏலத் தொகை (வாடகை) ரூ</th></tr>
<tr><td>1</td><td>நெ 7 பழைய பேருந்து நிலையம்</td><td>2300</td><td>345</td><td>2645</td><td>3000</td></tr>
</table>
மேற்கண்ட அட்டவணையின்படி ரூ.3000/- தொகைக்கு ஏலம் சென்றதால் மேற்படி நபர்க்கு குத்தகை நிபந்தனைகள் அடிப்படையில் வாடகைக்கு உரிமம் வழங்கி கடையினை ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u>: மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 8881/2016/அ1</td>
<td>தீர்மான எண்:1140<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள்<br>எண்-33</td>
<td>நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் 2023-2024ஆண்டு வரிவசூல் தொடர்பான ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படி சொத்துவரி, தொழில்வரி, காலிமனைவரி மற்றும் குடிநீர் இணைப்பு ஆகியவற்றிற்கான கேட்பு அறிவிக்கைகள் மயிலாடுதுறை மாவட்ட அச்சக சேவை மற்றும் உபதொழில்கள் கூட்டுறவு சங்க லிமிடெட் அவர்களிடமிருந்து அச்சடித்து வழங்கிட ஆகும் செலவீனம் ரூ.25,000/- த்திற்கான நகர்மன்றத்தின் ஒப்புதலை நகர்மன்ற தீர்மானம் எண்:1049 நாள்:22.12.2023 ன்படி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனம் பணிக்கான பட்டியல் ரூ.33,510/- வழங்கிடகோரி இந்நகராட்சிக்கு பட்டியல் வழங்கியுள்ளது.<br><br>எனவே நகர்மன்ற ஒப்புதல் தொகையினை விட கூடுதலாக பட்டியல் வரப்பெற்றுள்ளதால் மேற்கண்ட நிறுவனத்திற்கு மீதம் தொகை ரூ.8,510/- தொகையினை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 2641/2023/அ1.</td>
<td>தீர்மான எண்:1141<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>பொருள் எண்-34</td>
<td>
மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் மயிலாடுதுறை அவர்களின் கடித ந.க.எண்:1/2024/SVEEP நாள்:19.03.2024 படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 100% வாக்குப்பதிவு நடத்திட வேண்டி வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் (SVEEP) கீழ்கண்டுள்ளவாறு உள்ள எண்ணிக்கையில் விளம்பரங்களை அச்சடித்து வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>துண்டு பிரசுரம் எண்ணிக்கை</th><th>விளம்பரபதாகைகள் எண்ணிக்கை</th><th>Selfi models எண்ணிக்கை</th></tr>
<tr><td>1</td><td>50000</td><td>100</td><td>100</td></tr>
</table>
அதன் அடிப்படையில் Mayiladuthurai District Printing Service And Allied Industries Industrial Cooperative Society LTD மயிலாடுதுறை என்ற நிறுவனத்தின் மூலம் உடன் அச்சடித்து பெற்றிடவும், மேலும் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கட்சி விளம்பரங்கள் அகற்றுதல், சுவரில் உள்ள கட்சி விளம்பரங்கள் போன்றவைகளை சுண்ணாம்பு பூசுதல், பேனர்கள் மற்றும் சுவர்ஒட்டிகள்(Posters) அகற்றுதல் மற்றும் இதர தேர்தல் பணிகளுக்கான உத்தேச செலவீனம் ரூ.1,77,000/- நகராட்சி வருவாய் நிதியிலிருந்து தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் புதிய விதிகள் 2022 57(7)-ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<u>அலுவலகக்குறிப்பு</u>: தேர்தல்-2024 பணியின் அவசரம் கருதி செலவீனம் மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
ந.க.எண்:2581/2022/அ1.
</td>
<td>தீர்மான எண்:1142<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-35</td>
<td>
இந்நகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு குத்தகை இனங்கள் (2021-2024) குத்தகை இனங்கள் உரிமம் காலம் மார்ச் 31.03.2024 வரை முடிவடைந்ததால் மறுஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் வரை கீழ் கண்டுள்ள குத்தகை இனங்களை 01.04.2024 முதல் நகராட்சி துறையின் மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது.
<ol>
<li>புதிய பேருந்து நிலையம் கட்டணக்கழிவறை</li>
<li>பழைய பேருந்து கட்டணக்கழிவறை</li>
<li>270 கீழ் தரைக்கடைகள் வசூல் செய்தல் இனம்</li>
<li>முருகன் பூங்கா கட்டணக்கழிவறை</li>
<li>யாத்தீரீகர்கள் ஊர்தி கட்டண வசூல்</li>
</ol>
இவ்வினங்களுக்கான கட்டணங்கள் வசூல் செய்திட தேவையான டோக்கன்களை மயிலாடுதுறை கூட்டுறவு (உப தொழில்கள்) சங்க லிமிட் மயிலாடுதுறை நிறுவனம் வாயிலாக அச்சடித்து பெற்று விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. டோக்கன்கள் அச்சடித்தற்கும் அதற்காகும் செலவீனம் ரூ.4,50,703/- திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்: 191/2021/அ1.
</td>
<td>தீர்மான எண்:1143<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| பொருள் எண்-36 | இந்நகராட்சியில் 2024-2025 ஆம் முதல் மற்றும் இரண்டாம் அரையாண்டிற்குரிய சொத்துவரி தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1988 பிரிவு 84(1) -ன் படி ஏப்ரல் **01.04.2024** முதல் **30.04.2024** வரையிலும் மற்றும் இரண்டாம் அரையாண்டு சொத்துவரியினை அக்டோபர் 31-ஆம் தேதிக்குள்ளும், சொத்துவரி செலுத்தும் வரிவிதிப்பாளர்களுக்கு சொத்துவரியில் 5% சதவீதம் ஊக்கத்தொகை வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>இப்பொருள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி பொதுமக்கள் பயனடையும் வகையில் ஒலிபெருக்கி மூலம் ஆட்டோ விளம்பரம் செய்யவும், நகரின் மக்கள் கூட்டம் அதிகமாக உள்ள இடங்களில் விளம்பரபதாகைகள் அமைத்திடவும், விளம்பர நோட்டீஸ்கள் அச்சடித்து பொதுமக்களுக்கு வழங்கிடவும், மேலும் முதல் அரையாண்டு மற்றும் இரண்டாம் அரையாண்டிற்கான கேட்பு அறிவிக்கைகள் அச்சிட்டு வரிவிதிப்பாளர்களுக்கு வழங்கிடவும், பணியின் அவசரம் அவசியம் கருதி மயிலாடுதுறை மாவட்ட அச்சக சேவை மற்றும் உப தொழில்கள் தொழிற்கூட்டுறவு சங்க லிமெட் நிறுவனத்திடமிருந்து அச்சடித்து பெற்றடவும், இதற்காகும் உத்தேச செலவீனம் **ரூ.5,00,000/-**த்தினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் புதிய விதிகள் 2022 57(7)-ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**: பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் புதிய விதிகள் 2022 57(7)ன் ளகீழ் செலவீனம் மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 858/2024/அ1. | தீர்மான எண்:1144<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்-37 | நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் வரிவசூல் தொடர்பாக நடைபெற்ற ஆய்வுக்கூட்டங்களில் இந்நகராட்சி வரிவசூலில் மிகவும் பின்தங்கியுள்ளதாலும், வரிவசூல் தொடர்பாக தீவிர வரிவசூல் செய்திட அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொண்டு வரிவசூல் 100 சதவீதம் எய்திட துரித நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.<br><br>அதன்படி, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளிலும் சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் மற்றும் வரியில்லா இனங்களின் நிலுவை மற்றும் நடப்பு தொகையினை தினசரி வார்டு வாரியாக ஆட்டோவுடன் கூடிய ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்திடவும், இதர செலவீனங்களுக்கும் **ரூ.1,37,500/-** நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள நகர்மன்ற ஒப்புதல் தீர்மானம் எண்.1057 நாள்: 22.12.2023-ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து,<br>மேற்படி பணிக்காக உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ் கண்டுள்ளவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br><br>வ.எண் / உள்ளூர் நிறுவனங்களின் பெயர் / விலைப்புள்ளி (நாள் 1க்கு) ரு<br>1 / ஜெயந்தி ஆடியோஸ் ஊழியக்காரன் தோப்பு, சீர்காழி / **2500.00**<br>2 / லெட்சுமி ஆடியோஸ், சீர்காழி / **2800.00**<br>3 / ஆர் ஆர் எலெக்ட்ரீக்கஸ் கடைவீதி, சீர்காழி / **3000.00** | தீர்மான எண்:1145<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1 -ல் குறைவான விலைப்புள்ளி வழங்கிய ஜெயந்தி ஆடியோஸ் விலைப்புள்ளியினை ஏற்று பணிஉத்திரவு வழங்கி பணிமேற்கொள்ளப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u> 23.01.2024 முதல் 17.03.2024 வரை வரிசை எண் 1ல் கண்டுள்ள ஜெயந்தி ஆடியோஸ் மூலம் ஒலிபெருக்கியுடன் கூடிய ஆட்டோவுடன் விளம்பரம் செய்யப்பட்டதனை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 2852/2023/அ1.</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-38</td>
<td>இந்நகராட்சி மூன்றாண்டு குத்தகை இனங்கள் (2024 – 2027) 7-வது முறையாக மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கீழ் கண்டுள்ள இனங்களுக்கு,<br>1) புதிய பேருந்து நிலையம் கட்டணக்கழிவறை<br>2) யாத்திரீகர்கள் ஊர்தி கட்டணம்<br>3) முருகன் பூங்கா கட்டணக்கழிவறை<br>4) தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 270-ன் கீழ் தரைக்கடைகளின் வசூல் கட்டணம் ஆகிய இனங்களுக்கு 11.07.2024 அன்று கோரியதில் வரிசை எண் 1-ல் உள்ள புதிய பேருந்து நிலையம் கட்டணக்கழிவறைக்கு கீழ் கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர் முகவரி</th><th>அரசு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ</th></tr>
<tr><td>1</td><td>திருமதி. ஜி.பிரியா<br>த/பெ.<br>பிச்சைப்பிள்ளை<br>தேசாதி கதிர்வேல் தெரு, சீர்காழி</td><td rowspan="2">7,40,880.00</td><td>7,42,000,00</td></tr>
<tr><td>2</td><td>திரு.கேசவன்<br>த/பெ. மணி<br>42, வடக்குத்தெரு,<br>வள்ளுவக்குடி,<br>கொண்டல்,<br>சீர்காழி.</td><td>3,50,000,00</td></tr>
</table>
மேற்கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள ஒப்பந்தப்புள்ளி அரசு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ.7,40,880/-யை விட ரூ.7,42,000/- கூடுதலாக வழங்கியுள்ளதனை ஏற்று 01.08.2024 முதல் 31.03.2027 வரையிலான காலத்திற்கு குத்தகை உரிமம் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 2851/2023/அ1.</td>
<td>தீர்மான எண்:1146<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| பொருள் எண்-39 | இந்நகராட்சிக்கு 2024-2025-ம் ஆண்டிற்கு தேவையான எழுதுபொருட்கள், பதிவேடுகள், படிவங்கள் மற்றும் கணினி வரிவசூல் இரசீதுகள் வாங்கி கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவின தொகை **ரூ.3.00 லட்சம்** ஆகும். இச்செலவின தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:** 1. அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி எழுதுப்பொருட்களை அரசு அங்கீகாரம் பெற்றுள்ள கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 1525/2020/டி2. | தீர்மான எண்:1147<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்-40 | சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட 49, கைவிளாஞ்சேரி கிராமம், வார்டு–B பிளாக்–1 TS No: 38/3, RS No:12/2–ல் 7500 ச.மீ பரப்பளவில் உள்ள புதிய குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க அனுமதி வேண்டி மனுதாரர் திரு.ஆர்.இளங்கோவன் (&) திரு. E.ஸ்ரீராம், நெ.30/123, பிடாரி தெற்கு வீதி, சீர்காழி என்பவருக்கு, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்கள் SWP/L.P/DTCP/Ma.Ma.No:05/2024, ந.க.எண்:177/2024/2024/TCP, நாள்:26.02.2024 உத்தரவில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வரப்பெற்றுள்ளது. உத்திரவில் விதித்துள்ள நிபந்தனைப்படி பொது ஒதுக்கீடுகளான சாலை மற்றும் பூங்கா பொது உபயோக இடங்களை நகராட்சி ஆணையர் பெயரில் தானப்பத்திர பதிவு செய்து ஒப்படைத்துள்ளார்.<br>பத்திர ஆவண எண்:659/2024 நாள்:20.02.2024 மேலும், தானப்பத்திரத்தின்படி சாலை மற்றும் பூங்காக்களை ஆய்வு செய்து சரியாக உள்ளது என நகரசார் ஆய்வாளர் அவர்கள் குறிப்பு அளித்துள்ளார். மேற்படி, மனைப்பிரிவிற்கான மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவு அனுமதி கட்டணம் **ரூ.6000** மனைப்பிரிவு விண்ணப்ப கட்டணம் **ரூ.1000** மனைப்பிரிவு கூராய்வு கட்டணம் **ரூ.1000** வரைப்பட நகல் கட்டணம் **ரூ.500** மற்றும் கொடி நாள் **ரூ.2000** கூடுதல்: **ரூ.10,500/–**இவற்றை நகராட்சி கருவூலத்தில் செலுத்துச்சீட்டு எண்:099/001/1/23–24/0009546, நாள்: 25.03.2024 அன்று செலுத்தியுள்ளார்<br>மேலும், மனைப்பிரிவிற்கு மின் கம்பங்கள் மற்றும் மின் விளக்குகள் அமைக்க மின்சார வாரியத்தில் இந்தியன் வங்கி, தென்பாதி கிளையில் **ரூ.1,96,345/–** வங்கி வரைவோலை எண்:866473 நாள்:13.06.2024 அன்று செலுத்தப்பட்டுள்ளது மற்றும் மனைப்பிரிவிற்கு உண்டான மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு இந்தியன் வங்கி, தென்பாதி கிளையில் **ரூ.3,48,720/–** வங்கி வரைவோலை எண்: 866482 நாள்:24.06.2024 அன்று நகராட்சி ஆணையர் பெயரில் செலுத்தப்பட்டுள்ளது.இதனை தொடர்ந்து மனைப்பிரிவு அனுமதிக்கும் மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:** மன்றத்தின் பார்வைக்கு<br>ந.க.எண்: 0336/2023/எப்1. | தீர்மான எண்:1148<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்-41 | மனுதாரர் திரு.க.சரண்ராஜ் த/பெ.கனகராஜ், நெ.1, ஸ்ரீநகர் காலனி, பனங்காட்டான்குடி சாலை, சீர்காழி. அவர்கள்<br>சீர்காழி நகராட்சி – நகராட்சி எல்லைக்குட்பட்ட 54, தாடாளன் கோவில் கிராமம் வார்டு–சி, பிளாக்–1, நகரளவு எண்கள்: 13/1 மற்றும் 13/3 சர்வே எண்:54/1 மற்றும் 54/2Pt 15400 ச.மீ பரப்பளவில் உள்ள நிலம் சீர்காழி நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட முழுமை திட்டத்தில் விவசாய பகுதியாக உள்ளது. மேற்படி விவசாய பகுதியாக உள்ளதை குடியிருப்பு பகுதியாக நிலப்பயன்பாடு மாற்றம் செய்து தர கோரி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் நகராட்சி வழியாக விண்ணப்பம் செய்துள்ளார்.<br>மேற்படி மனுதாரருக்கு கிரய ஆவண எண்: 2042/2024 நாள்:16.05.2024 மற்றும் கிரய ஆவண எண்: 2017/2024 நாள்:16.05.2024 அதன் மூலம் சொந்தமாக உள்ளது. | தீர்மான எண்:1149<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | இக்கிரய பத்திரத்திற்கு உரிய மூல ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி இடம் சீர்காழி நகராட்சி உத்தேசிக்கப்பட்டுள்ள அங்கீரிக்கப்பட்ட முழுமை திட்டத்தில் விவசாய பகுதியாக பயன்பாடாக அமைந்துள்ளது. மனுதாரர் தனக்கு சொந்தமான இவ்விடம் தனக்கே உரிமை உள்ளது என்பதை ஆவணங்கள் மூலம் நிருபித்துள்ளார்.<br>மேற்படி இந்த நிலங்களிலிருந்து இடுகாடு,சுடுகாடு எதுவும் 100 மீட்டருக்குள் இல்லை எனவும் வெள்ளப்பெருக்கால் உத்தேசித்த மனைப்பிரிவு இடம் பாதிக்கப்படாது உத்தேசித்த மனைப்பிரிவில் 100 மீட்டருக்குள் புகைவண்டி பாதை ஏதும் இல்லை எனவும் இந்த நிலத்திலிருந்து அமைக்கப்படும் பிரதான சாலை தேசிய நெடுஞ்சாலையோடு இணைக்கப்படவில்லை எனவும் மேற்படி புல எண்ணில் அமையும் மனைப்பிரிவுகளில் உயர் மின் அழுத்த கம்பிபாதைகள் எதுவும் இல்லை.<br>மேற்படி நிலப்பயன்பாடு மாற்றம் கோரும் புல எண்ணில் உள்ள நிலங்களில் மனுதாரர் பெயரில் பட்டா மாற்றம் செய்துள்ளதை நிலப்பயன்பாடு மாற்றம் கோரும் புல எண்ணில் உள்ள நிலங்களில் மனுதாரர் மனைப்பிரிவு அமைப்பதற்கு சட்டபூர்வமான உரிமை உள்ளது என சீர்காழி அரசு வழக்கறிஞர் தனித்தனியே சட்டகருத்துரு வழங்கிள்ளாார். புல எண்களின் நகரளவை பதிவேடு நகல், நகரளவை வரைபடம், சிட்டா அடங்கல் நகல், நிலப்பயன் மாற்றம் கோரும் வரைபடம் ஆகியவை சமர்ப்பித்துள்ளார்.<br>மனுதாரர் நில உபயோக மாற்றம் செய்யகோரிய கருத்துருவிற்கு இந்நகராட்சி மூலம் கடந்த 12.06.2024 மற்றும் 13.06.2024–ல் பொதுமக்களின் ஆலோசனை ஆட்சேபனை கோரி வணக்கம் தமிழகம் தினசரி நாளிதழில் தமிழ் விளம்பரம் மற்றும் TRINITY Mirror தினசரி நாளிதழில் ஆங்கிலம் விளம்பரம் செய்யப்பட்டது. இச்செய்தி வெளியான தினந்திருந்து 30 தினங்கள் வரை சீர்காழி நகராட்சிக்கு எவ்வித ஆலோசனை மற்றும் ஆட்சேபனை பொதுமக்களிடமிருந்து வரப்பெறவில்லை. எனவே மனுதாரர் சமர்ப்பித்துள்ள கருத்துருவினை மேல்நடவடிக்கை மேற்கொள்ள நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரை செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்:1205/2024/எப்1. | |
| பொருள் எண்-42 | மனுதாரர் திரு.R.கணேசன் மற்றும் G.சந்தானம் நெ.3/12C, அக்கரஹார தெரு, சீர்காழி அவர்கள்<br>சீர்காழி நகராட்சி – நகராட்சி எல்லைக்குட்பட்ட 49, கைவிளாஞ்சேரி கிராமம், வார்டு–பி, பிளாக்–1, நகரளவு எண்கள்: 47/2,3,5,6,7,1 சர்வே எண்: 48/1,2,3B,5A,5B,4 , ஒரு ஏக்கர் 79 செண்ட் பரப்பளவில் உள்ள நிலம் சீர்காழி நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட முழுமை திட்டத்தில் விவசாய பகுதியாக உள்ளது. மேற்படி விவசாய பகுதியாக உள்ளதை குடியிருப்பு பகுதியாக நிலப்பயன்பாடு மாற்றம் செய்து தர கோரி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் நகராட்சி வழியாக விண்ணப்பம் செய்துள்ளார்.<br>மேற்படி மனுதாரருக்கு கிரய ஆவண எண்: 3818/2021 நாள்:17.12.2021 மற்றும் கிரய ஆவண எண்: 1432/2021 நாள்:05.05.2021 அதன் மூலம் சொந்தமாக உள்ளது. இக்கிரய பத்திரத்திற்கு உரிய மூல ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி இடம் சீர்காழி நகராட்சி உத்தேசிக்கப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட முழுமை திட்டத்தில் விவசாய பகுதி பயன்பாடாக அமைந்துள்ளது. மனுதாரர் தனக்கு சொந்தமான இவ்விடம் தனக்கே உரிமை உள்ளது என்பதை ஆவணங்கள் மூலம் நிரூப்பித்துள்ளார்.<br>மேற்படி இந்த நிலங்களிலிருந்து இடுகாடு,சுடுகாடு எதுவும் 100 மீட்டருக்குள் இல்லை எனவும் வெள்ளப்பெருக்கால் உத்தேசித்த மனைப்பிரிவு இடம் | தீர்மான எண்:1150<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | பாதிக்கப்படாது உத்தேசித்த மனைப்பிரிவில் 100 மீட்டருக்குள் புகைவண்டி பாதை ஏதும் இல்லை எனவும் இந்த நிலத்திலிருந்து அமைக்கப்படும் பிரதான சாலை தேசிய நெடுஞ்சாலையோடு இணைக்கப்படவில்லை எனவும் மேற்படி புல எண்ணில் அமையும் மனைப்பிரிவுகளில் உயர் மின் அழுத்த கம்பிபாதைகள் எதுவும் இல்லை.<br>மேற்படி நிலப்பயன்பாடு மாற்றம் கோரும் புல எண்ணில் உள்ள நிலங்களில் மனுதாரர் பெயரில் பட்டா மாற்றம் செய்துள்ளதை நிலப்பயன்பாடு மாற்றம் கோரும் புல எண்ணில் உள்ள நிலங்களில் மனுதாரர் மனைப்பிரிவு அமைப்பதற்கு சட்டபூர்வமான உரிமை உள்ளது என சீர்காழி அரசு வழக்கறிஞர் தனித்தனியே சட்டகருத்துரு வழங்கிள்ளாார். புல எண்களின் நகரளவை பதிவேடு நகல், நகரளவை வரைபடம், சிட்டா அடங்கல் நகல், நிலப்பயன் மாற்றம் கோரும் வரைபடம் ஆகியவை சமர்ப்பித்துள்ளார்.<br>மனுதரார் நில உபயோக மாற்றம் செய்யகோரிய கருத்துருவிற்கு இந்நகராட்சி மூலம் கடந்த 14.05.2024 மற்றும் 12.06.2024–ல் பொதுமக்களின் ஆலோசனை மற்றும் ஆட்சேபனை கோரி வணக்கம் தமிழகம் தினசரி நாளிதழில் தமிழ் விளம்பரம் மற்றும் TRINITY Mirror தினசரி நாளிதழில் ஆங்கிலம் விளம்பரம் செய்யப்பட்டது. இச்செய்தி வெளியான தினத்திலிருந்து 30 தினங்கள் வரை சீர்காழி நகராட்சிக்கு எவ்வித ஆலோசனை மற்றும் ஆட்சேபனை பொதுமக்களிடமிருந்து வரப்பெறவில்லை. எனவே மனுதாரர் சமர்ப்பித்துள்ள கருத்துருவினை மேல்நடவடிக்கை மேற்கொள்ள நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரை செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:0484/2024/எப்1. | |
| பொருள் எண்-43 | சீர்காழி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 1 முதல் 24 முடிய உள்ள அனைத்து வார்டுகளிலும் குப்பை கழிவுகளை சேகரம் செய்யும் பணியினை வாகனங்கள் மற்றும் பணியாளர்களை கொண்டு குப்பைகளை தரம்பிரித்து அதனை செயலாக்கம் செய்யப்படும் இடத்தில் ஒப்படைத்தல் பணியினை மேற்கொள்ள 01.06.2023 முதல் 31.05.2024 முடிய ஓராண்டு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும் பணிகாலம் முடிவடைவதால் 01.06.2024 முதல் 31.08.2024 வரை 3 மாதங்களுக்கு பணிகள் மேற்கொள்ள பணிகாலம் நீட்டிப்பு செய்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்: 4064/2021/எச்1. | தீர்மான எண்:1151<br>நாள்: 24.07.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

நாள்: 24-07-2024 நகர்மன்றதலைவர்
இடம்: சீர்காழி சீர்காழிநகராட்சி